'' கண்ணைக் காப்பது இமை ''
'' மண்ணைக் காப்பது மழை ''

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2013-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21-ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று."**

**பொருள் :** **வரம்பு மீறிப் பிறர் செய்யும் தீமைகளையும் பொறுத்துக் கொள்வது சிறந்தது; அதைவிட, அத்தீமைகளை மறந்து விடுவது சிறந்தது.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>மநி 1/31493/2013</u>**

மதுரை மாநகராட்சி ஆணையாளராக பணிபுரிந்து வந்த முனைவர்.இரா.நந்தகோபால்,இ.ஆ.ப., அவர்கள் வேலூர் மாவட்ட ஆட்சியாளராக பணி மாறுதலில் சென்றதால், மதுரை மாநகராட்சி துணை ஆணையாளராக பணிபுரிந்து வரும் திருமதி.கோ.லீலா அவர்களை ஆணையாளர் முழு கூடுதல் பொறுப்பு பணி பார்க்க உத்தரவிடப்பட்ட அரசாணை எண்:180, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந4) துறை, நாள்: 31.10.2013-ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.523</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது.</u>**

**2) <u>ந.க.எண்.A3/020181/13</u>**

மதுரை மாநகராட்சி வில்லாபுரம் நடுநிலைப்பள்ளி தனியார் கட்டிடத்தில் இயங்கிவருகின்றது. ஏற்கனவே அதற்கு மாதவாடகையாக ரூ.19,442/- வழங்கப்பட்டு வருகிறது. 2013-14ஆம் ஆண்டு Plinth Area விலைவிகிதப்படி பொறியாளர் பிரிவில் கணக்கிடப்பட்டுள்ள, மாதவாடகை ரூ.24,099/-(ரூபாய் இருபத்து நான்காயிரத்து தொண்ணூற்று ஒன்பது மட்டும்) என நிர்ணயம் செய்வதற்கும், 01.06.2013 முதல் மாதவாடகை ரூ.24,099/- வழங்க அனுமதிப்பதற்கும் மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.524**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) B3/036876/13**

மதுரை மாநகராட்சி 100 வார்டுகள் முழுமை பெற்று நான்கு மண்டல அலுவலகங்களாக செயல்பட்டுவரும் நிலையில் பொதுமக்களிடமிருந்து மாநகராட்சிக்கு வரவேண்டிய வீட்டுவரி, குழாய் கட்டணம், பாதாளச் சாக்கடைக் கட்டணம் மற்றும் ஏனைய வரிகள், கட்டணங்கள் அனைத்தும் மாநகராட்சியால் செயல்படுத்திவரும் வரிவசூல் கணினி மையங்கள் மற்றும் கருவூலங்களில் நேரடியாக பணமாகவும், காசோலையாகவும் பெறப்பட்டு வருகிறது. மேற்படி வரிவசூல் மையங்கள் மற்றும் கருவூலங்களில் நேரடியாக பணமாக பெறும்பட்சத்தில் ரூபாய் நோட்டுக்களை நல்ல நோட்டுகள் மற்றும் கள்ள நோட்டுகள் அறிய இயலாத நிலை உள்ளது. எனவே, மேற்படி இழப்புகளிலிருந்து விடுபடவும் கள்ள ரூபாய் நோட்டுக்களை கண்டறியவும் அதற்கான இயந்திரங்களை ஒவ்வொரு மையத்திற்கும் மற்றும் ஒவ்வொரு கருவூலத்திற்கும் ஒன்று வாங்க ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.525**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) H3/10196/07**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு தலா 15 நபர்கள் வீதம், நான்கு மண்டலத்திற்கு 60 நபர்களில் மண்டலம் எண் – 1ல் ஒரு நபரும், மண்டலம் எண் – 4ல் ஒரு நபரும் மாநகராட்சியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேற்கண்ட 60 நபர்களில் 2 நபர்களை நீக்கம் செய்து மீதமுள்ள 58 நபர்களும் மேலும் கூடுதலாக பதிலி பணியாளர்கள் மண்டலம் எண்.2ல் 3 நபர்களும், மண்டலம் எண் – 3ல் 5 நபர்களும் ஆக மொத்தம் 66 நபர்களை வேலை வாய்ப்பு துறை அலுவலக பதிவு அட்டையுடன் திருவிழா காலங்களில் ஆள் எடுப்பது போல் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலிகளாக 66 நபர்கள் மட்டும் பணிக்கு எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். தற்சமயம் இப்பணியாளர்களின் பணிக்காலம் 02.10.2013ல் முடிவடைந்து விட்டதால், பொது மக்கள் நலன் கருதியும் மீண்டும் பணியினை தொடரவும் 04.10.2013 முதல் 31.12.2013 வரை 89 நாட்களுக்கு மட்டும் பணியினை நீட்டிப்பு செய்து பணி செய்யப்பட்டு வருகின்றனர். மேற்படி பணிக்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து தினக்கூலி அடிப்படையில் உரிய ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.526**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) ந.க.எண்.A3/036869/13**

மதுரை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 65 பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் மற்றும் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் மொத்தம் 17550 நபர்களும் Photo Identy Card விலையில்லாமல் வழங்கவும் அதற்கான செலவினத்தை 2013–2014ஆம் ஆண்டிற்கான கல்விநதியிலிருந்து மேற்கொள்ளவும் 12.11.2013 அன்று நடைபெற்ற கல்விக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கல்விக்குழு தீர்மானத்தின்படி Photo Identy Card வழங்குவதற்கும், மேற்படி செலவினத்தை 2013–2014ஆம் ஆண்டிற்கான கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.527**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) ந.க.எண்.A3/036870/13**

மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில், யோகா ஆங்கில பேச்சுப்பயிற்சி, சிலம்பம், பரதநாட்டியம், அணிவகுப்பு இசைக்கருவி பயன்படுத்துவதற்கு பயிற்சி அளிப்பதற்கு 10 தொழிற்பயிற்சி ஆசரியர்களை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்வதற்கும், அதற்கான செலவினத்தை 2013–2014ஆம் ஆண்டிற்கான கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளவும் 12.11.2013 அன்று நடைபெற்ற கல்விக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கல்விக்குழு தீர்மானத்தின்படி 10 தொழிற்பயிற்சி ஆசிரியர்களை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்வதற்கும், மேற்படி செலவினத்தை 2013–2014ஆம் ஆண்டிற்கான கல்விநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.528**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) ந.க.எண்.A3/036867/13**

மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு மதுரை மாநகராட்சி பள்ளிகளுக்கு இடையேயான இரண்டாம் ஆண்டு விளையாட்டு போட்டியை சிறப்பாக நடத்த வேண்டும் எனவும், மாவணவர்களின் அறிவியல் திறனை ஊக்கப்படுத்தும் வகையில் அறிவியல் கண்காட்சி முதன்முறையாக நடத்த வேண்டுமெனவும், மேற்படி செலவினங்களை 2013–2014ஆம் ஆண்டிற்கான கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளவும் 12.11.2013 அன்று நடைபெற்ற கல்விக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கல்விக்குழு தீர்மானத்தின்படி விளையாட்டு போட்டி மற்றும் அறிவியல் கண்காட்சி நடத்துவதற்கும், மேற்படி செலவினங்களை 2013–2014ஆம் ஆண்டிற்கான கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.529**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) ம.பொ.4/16567/12**

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 கிராம பஞ்சாயத்துகளில் உள்ள வார்டுப் பகுதிகள் நகராட்சி / பேரூராட்சி / பஞ்சாயத்து நிலைகளில் இருந்த போது உரிய வரி விதிப்புகள் பதியப்படாமல் குடிநீர் இணைப்புகள் உள்ளதாக அறியப்பட்டது. எனவே அதனை முறைப்படுத்தும் பொருட்டு மேற்கண்ட குடிநீர் இணைப்புகளை சம்பந்தப்பட்ட வார்டுப் பொறியாளர்கள் வார்டு பிட்டர்களுடன் இணைந்து ஆய்வு செய்து குடிநீர் குழாய் இணைப்புக் கட்டணத்தினை சம்பந்தப்பட்ட குடியிருப்பு உரிமையாளரிடம் தெரிவித்து மாநகராட்சிக்கு செலுத்தவும் முறையாக வரி விதிப்புகள் செய்து கணினியில் பதிவு செய்யவும் மேலும் மாநகராட்சியுடன் மேற்கண்ட பகுதிகள் இணைக்கப்பட்ட (24.10.2011) நாளது தேதி முதல் நடப்பு வரை நிலுவையில் உள்ள குடிநீர் வரிகளை வசூல் செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.530**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ம.பொ.1/033692/13**

மதுரை மாநகராட்சி, தற்போது 100 வார்டுகளாக மாறியுள்ள நிலையில் இவ்வார்டுகளில் உள்ள சாலைகளில் மண்கள் அதிகளவில் தேங்குவதால் சாலை விபத்துகள் மற்றும் பொதுமக்களுக்கு சுகாதார கேடுகளை ஏற்படுத்துகின்றது. இதனை கருத்தில் கொண்டு மண் அகற்றும் இயந்திர வாகனம் (TRUCK MOUNTED SWEEPING MACHINE) வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்தின் சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றின் விலை ரூ.45.00 இலட்சமாகும். மேலும் 100 வார்டுகளுக்கு ஒரு வாகனம் போதுமானதாக இருக்காது என்ற காரணத்தினால் இரண்டு வாகனங்கள் வாங்குவதற்கு மொத்தம் ரூ.90.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையாகும். மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக ஒப்புதல் கோரி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.531**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10)ம.பொ.1/027583/13**

மதுரை மாநகராட்சி, மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2 பகுதிகளுக்குட்பட்ட வார்டுகளில் சாலை பராமரிப்பு பணிகள் மற்றும் இதர அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மண்டலத்திற்கு ஒரு ரோபோ (SKID STEER ROBO) வாகனம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்தின் சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றின் விலை ரூ.19.00இலட்சமாகும். இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ.38.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையாகும். மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக ஒப்புதல் கோரி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.532**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11)ம.பொ.1/027584/13**

மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 மற்றும் மண்டலம் 4 பகுதிகளுக்குட்பட்ட வார்டுகளில் சாலை பராமரிப்பு பணிகள் மற்றும் இதர அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மண்டலத்திற்கு ஒரு ரோபோ (SKID STEER ROBO) வாகனம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்தின் சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special

Government Rate) வாகனம் ஒன்றின் விலை ரூ.19.00இலட்சமாகும். இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ.38.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையாகும். மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக ஒப்புதல் கோரி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.533**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12)ம.பொ.4/ம.எண்.859/13-14**

மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 மற்றும் மண்டலம் 4 பகுதிகளுக்குட்பட்ட வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளில் பழுதுகள் ஏற்பட்டால் அதனை உடனுக்குடன் சரிசெய்யவும் மற்றும் இதர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மண்டலத்திற்கு SKY LIFT வாகனம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்தின் சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றிற்கு ரூ.28.00இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ.56.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையாகும். மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக ஒப்புதல் கோரி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.534**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13)ம.பொ.4/ம.எண்.860/13-14**

மதுரை மாநகராட்சி, மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2 பகுதிகளுக்குட்பட்ட வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளில் பழுதுகள் ஏற்பட்டால் அதனை உடனுக்குடன் சரிசெய்யவும் மற்றும் இதர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மண்டலத்திற்கு SKY LIFT வாகனம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்தின் சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றிற்கு ரூ.28.00இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ.56.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையாகும். மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக ஒப்புதல் கோரி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.535**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14)ம.பொ. 4 / 15475 / 05**

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து வழக்கறிஞர் ஆணையக்குழு கடந்த 24.10.2012 அன்று ஆய்வு மேற்கொண்டது. மேற்படி ஆய்வில் பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு பணிகளில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதாகவும் அதனை உடனடியாக சரிசெய்யும் படி கேட்டுக் கொண்டதற்கிணங்க பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் M/s. FOOD சென்னை நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக இல்லாததாலும் அதனை உடனடியாக சரி செய்யும் படி கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்கண்ட பேருந்து நிலையத்தின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் M/s. FOOD சென்னை நிறுவனத்தின் சப்ளை உத்திரவு கடந்த 10.11.2012 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு ரத்து செய்யப்பட்டது.

மேற்கண்ட நிறுவனத்தின் சப்ளை உத்தரவு இரத்து செய்யப்பட்ட காரணத்தினாலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினைக் கருத்தில் கொண்டும் ஏற்கனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு தெரிவித்துள்ள வழக்கமான நிபந்தனைகளின் அடிப்படையிலும் பணிகளை மேற்கொள்ள M/s. அன்னை தெரசா ரூரல் டெவலப்மெண்ட் டிரஸ்ட் மதுரை நிறுவனம் கடிதம் அளித்ததன் அடிப்படையில் அக்கடிதத்தினை ஏற்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் பேருந்து நிலையத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் தவிர்க்கும் பொருட்டும் தனியார் பேருந்துகள் பேருந்து நிலையத்தில் செல்வதனை தவிர்க்கும் பொருட்டும் முழுமையாக கண்காணிக்கவும் பாதுகாப்பு பணி மேற்கொள்ளவும் தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகம், சென்னை (TEXCO) நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கப்பட்டு பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நிறுவனத்திற்கு அரசாணை எண்.456, பொது (முன்னாள் இராணுவத்தினர்) துறை, நாள்.17.05.2012ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஊதிய விலை விகிதத்தின் அடிப்படையில் 12 காவலர்களை சப்ளை செய்ய, சப்ளை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.536**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15)<u>மவ3/036600/2013</u>**

மதுரை மாநகராட்சி மைய வருவாய்ப்பிரிவு மண்டலம்–3 க்கு உட்பட்ட வார்டு எண் : 50 நெல்பேட்டை ஆடு வதை செய்யும் கூடத்தில் ஏற்கனவே ஒரு ஆட்டிற்கு ரூ.3/- வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மாநகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டு ஆடு ஒன்றிற்கு ரூ.10/- வீதம் வசூல் செய்யவும் மண்டலம்–3 வார்டு–57 அனுப்பானடியில் செயல்பட்டு கொண்டிருக்கும் ஆடு வதை செய்யும் கூடத்தில் ஒரு ஆட்டிற்கு ரூ.3/-வீதம் வசூல் செய்யப்பட்டு வருவதை ரூ.5/- என வசூல் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.537</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**

**மேயர்**

**மதுரை மாநகராட்சி**

**மதுரை**

**நாள் : 14.11.2013**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2013-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21-ம் நாள் வியாழக்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) ம3.எ 5/ 009711 /2013**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் புதிதாக வழங்குதல், மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தொலைபேசி வடங்கள் பதிப்பதற்காக சாலைகளை தோண்டப்படுகிறது. அவ்வாறு தோண்டப்படும் சாலைகளுக்கு சாலை சீரமைப்புக் கட்டணம் வசூல் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் சுற்றறிக்கையின் படி (ந.க.எண். 748/08/குவ 2) ஆண்டுத்தோறும் 5% சதவீதம் உயர்த்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நடப்பாண்டில் கீழ்க்கண்டவாறு சாலை சீரமைப்புக் கட்டணம் 5% சதவீதம் உயர்த்தப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ.எண் | விபரம் | சாலை சீரமைப்புக் கட்டணம் (ஒர சதுர மீட்டருக்கு) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | தார்சாலை | 2220.00 |
| 2. | சிமெண்ட் கான்கிரீட் சாலை | 1320.00 |
| 3. | மெட்டல் சாலை | 1009.00 |
| 4. | மண் சாலை | 350.00 |
| 5. | கல்தளம் | 421.00 |
| 6. | பேவர் சாலை | 2290.00 |
| 7. | பேவர் பிளாக் சாலை | 900.00 |

மேற்கண்டவாறு சாலைகள் தோண்டப்படும் போது மேற்கண்ட சாலை சீரமைப்புக் கட்டணத்தினை வசூல் செய்தவற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.538**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) ந.க.எண்:மதி.1(ம3)/20837/2013**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீரைத்துரை பகுதியில் வார்டு 64-ல் நல்லமுத்துப்பிள்ளை புதுதெருவில் சர்வே வார்டு-II பிளாக் எண்: 29, புல எண்: 73, மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சத்துணவு கூடம், காய்கறி கூடம், ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை மற்றும் உபயோகமற்ற பாழடைந்த நிலையில் காலியிடங்கள் உள்ளது. சத்துணவு கூடம் மற்றும் சந்து பகுதியினை தவிர்த்து B-4 கீரைத்துரை காவல் நிலையம் கட்ட ஒதுக்கீடு செய்ய காவல் ஆணையர் மதுரை மாநகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்கண்ட பொருள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி வார்டு 64, வளர்ச்சி திட்ட பணிகளுக்கும், எதிர்கால அபிவிருத்தி பணிகளுக்கும் இந்த இடம் மாநகராட்சிக்கு தேவைப்படுவதால் மேற்படி இடத்தினை ஒதுக்கீடு செய்து தர இயலாது என காவல்துறை ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும் 05.11.2013 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் கலந்தாய்வு கூட்டத்தில் மேற்கண்ட இடத்தை சிறப்பினமாக கருதி கீரைத்துரை காவல் நிலையம் கட்ட இடம் ஒதுக்கீடுசெய்து தர அறிவுறுத்தப்பட்டது. எனவே 1170.5 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட

மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை காவல்துறைக்கு ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளரின் ஒப்புதல் பெற்று இடஒதுக்கீடு செய்யலாம் என மாமன்ற ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.539</u>**

**<u>நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று இடஒதுக்கீடு செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

3) **<u>H6/36477/13</u>**

மதுரை மாநகராட்சியில் உள்ள குடிசை பகுதிகளில் வாழும் ஏழை மக்களின் உடல் ஆரோக்கியத்தையும், வாழ்வாதாரத்தையும் கருத்திற்கொண்டு அவர்களின் பசியை போக்கும் வகையில் ஏழை மக்கள் வெளி நோயாளிகளாக வந்து செல்வதுடன், சுமார் 6000க்கு மேற்பட்ட மக்கள் உள் நோயாளிகளாகவும் பயன் பெற்று செல்லும் அரசு இராஜாஜி மருத்துவமனை வளாகத்தில் 600 நபர்களுக்கு நபர் ஒன்றுக்கு நான்கு இட்லிகள் வீதம் 2400 இட்லிகளும், 600 சாம்பார் சாதமும், 300 தயிர் சாதமும் வழங்க உத்தேசிக்கப்பட்டு மலிவு விலை உணவகம் திறக்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் ஒப்புதல் வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.540</u>**

**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

4) **<u>H6/18803/13</u>**

மத்திய அரசின் நிதியின் கீழ் தேசிய நகர்புற சுகாதார அமைப்பு (NUHM) திட்டத்தின்படி மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் செயல்பட்டு வரும் 19 நலவாழ்வு மையங்கள், 17 மகப்பேறுமனைகள் மற்றும் 17 மருந்தகங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு 31 நகர ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC), நகர சமுதாய சுகாதார மையம் (UCHC) உருவாக்கப்படுகிறது.

மதுரை மாநகராட்சி பகுதியின் 100 வார்டுகளில் உள்ள மொத்த மக்கள் தொகை 15,60,000ல் 50,000 மக்கட்தொகைக்கு ஒரு நகர்புற ஆரம்ப சுகாதார மையம் வீதம் 31 நகர ஆரம்ப சுகாதார மையங்களும், 5,00,000 மக்கட்தொகைக்கு ஒரு நகர சமுதாய சுகாதார மையம் வீதம் நான்கு நகர சமுதாய சுகாதார மையங்களும் அமைக்கப்டும். இதர மருந்தகங்கள் துணை சுகாதார நிலையங்களாக செயல்படும்.

மதுரை மாநகராட்சியில் மொத்த மக்கட்தொகை 16 லட்சம். மதுரை மாநகர எல்லைக்குட்பட்டு 2011ல் 72 வார்டுகள் 100 வார்டுகளாக விரிவாக்கப்பட்டது. தாய்சேய் நலம் மற்றும் மருத்துவ பணிகள் அனைத்தும் 72 வார்டுகளில் இன்று வரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பான அறிக்கைகள் அனைத்தும் துணை இயக்குநர், பொது சுகாதாரப்பணிகள், மதுரை அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. புதிதாக இணைக்கப்பட்டுள்ள 28 வார்டுகளில் உள்ள மக்கட்தொகைக்கான தாய்சேய் நல பணிகளை மட்டும் இயக்குநர், பொது சுகாதாரப்பணிகள், மதுரை அவர்களால் பார்க்கப்பட்டு வருகிறது.

மேலும் 100 வார்டுகளில் பிறப்பு / இறப்பு பதிவு, Epidemic, Endemic மற்றும் சுகாதாரப்பணிகள் அனைத்தும் மதுரை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் தாய்சேய் நலம் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான பணியாளர்களை நியமனம் செய்வதற்கும் 100 வார்டுகளிலும் அனைத்து பணிகளையும் மாநகராட்சியே செயல்படுத்தவும், மருத்துவமனை கட்டிட வசதி, தேவையான மருத்தவ உபகரணங்கள், மருந்துகள் மற்றும் தேவையான பணியாளர்கள் ஆகியவற்றை தேசிய நகர்புற சுகாதார அமைப்பு (NUHM) மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதியின் கீழ் தேசிய நகர்புற சுகாதார அமைப்பு (NUHM) திட்டத்தின் படி மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் செயல்பட்டு வரும் 19 நலவாழ்வு மையங்கள், 17 மகப்பேறுமனைகள் மற்றும் 17 மருந்தகங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு 31 நகர ஆரம்ப சுகாதார நிலையம், 4 நகர சுகாதார மையம் உருவாக்குவதற்கு கருத்தரு ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்தை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.541</u>**

**<u>குறிப்பு பதிவு செய்யப்பட்டது.</u>**

5) **<u>ம.பொ.4/ Est.976/13-14</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 44ல் உள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் பின்புறம் Truck Terminal அமைக்கும் பணிக்கு ரூ.73,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு , மாமன்ற தீர்மானம் எண் 509 நாள் 18.10.13 ன்படி நிர்வாக ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் M/S. S.R.M Enterprises 4/289 திருமலை தெரு, குருசாமி நகர்,

நாகமலை புதுக்கோட்டை, மதுரை என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு விலைக்குறைப்பு கோரியதில் மதிப்பீட்டு விலையிலிருந்து 4% கூடுதலாக வேலை செய்து தர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.542**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

6) **மபொ.4/ Est.979/13-14**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 44ல் உள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் பின்புறம் Truck Terminal அமைக்கும் பணிக்கு ரூ.85,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு , மாமன்ற தீர்மானம் எண் 512 நாள் 18.10.13 ன்படி நிர்வாக ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் M/S. S.R.M Enterprises 4/289 திருமலை தெரு, குருசாமி நகர், நாகமலை புதுக்கோட்டை, மதுரை என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு விலைக்குறைப்பு கோரியதில் மதிப்பீட்டு விலையிலிருந்து 4% கூடுதலாக வேலை செய்து தர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.543**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

7) **மபொ.4/ Est.978/13-14**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 44ல் உள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் பின்புறம் Truck Terminal அமைக்கும் பணிக்கு ரூ.84,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு , மாமன்ற தீர்மானம் எண் 511 நாள் 18.10.13 ன்படி நிர்வாக ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் M/S. S.R.M Enterprises 4/289 திருமலை தெரு, குருசாமி நகர், நாகமலை புதுக்கோட்டை, மதுரை என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு விலைக்குறைப்பு கோரியதில் மதிப்பீட்டு விலையிலிருந்து 4% கூடுதலாக வேலை செய்து தர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.544**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

8) **மபொ.4/ Est.981/13-14**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 44ல் உள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் பின்புறம் Truck Terminal அமைக்கும் பணிக்கு ரூ.99,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு , மாமன்ற தீர்மானம் எண் 514 நாள் 18.10.13 ன்படி நிர்வாக ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் M/S. S.R.M Enterprises 4/289 திருமலை தெரு, குருசாமி நகர், நாகமலை புதுக்கோட்டை, மதுரை என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு விலைக்குறைப்பு கோரியதில் மதிப்பீட்டு விலையிலிருந்து 4% கூடுதலாக வேலை செய்து தர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.545**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

9) **மபொ.4/ Est.980/13-14**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 44ல் உள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் பின்புறம் Truck Terminal அமைக்கும் பணிக்கு ரூ.98,000,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு , மாமன்ற தீர்மானம் எண் 513 நாள் 18.10.13 ன்படி நிர்வாக ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் M/S. S.R.M Enterprises 4/289 திருமலை தெரு, குருசாமி நகர், நாகமலை புதுக்கோட்டை, மதுரை என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு விலைக்குறைப்பு கோரியதில் மதிப்பீட்டு விலையிலிருந்து 4% கூடுதலாக வேலை செய்து தர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று

அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.546**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) ம.பொ.4/ Est.977/13-14**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 44ல் உள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் பின்புறம் Truck Terminal அமைக்கும் பணிக்கு ரூ.91,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு , மாமன்ற தீர்மானம் எண் 510 நாள் 18.10.13 ன்படி நிர்வாக ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் M/S. S.R.M Enterprises 4/289 திருமலை தெரு, குருசாமி நகர், நாகமலை புதுக்கோட்டை, மதுரை என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு விலைக்குறைப்பு கோரியதில் மதிப்பீட்டு விலையிலிருந்து 4% கூடுதலாக வேலை செய்து தர சம்மதகடிதம் கொடுத்துள்ளதை ஏற்று அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.547**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) வ.ம.பொ.7/033823/13**

மதுரை மாநகராட்சி வார்டு 45ல் பழைய புல எண் 181/2(P) தல்லாகுளம் கிராமம் புதிய எண் சர்வே வார்டு XVI பிளாக் எண் 57 புல எண் 68 ல் சர்க்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட இடத்தில் அங்கன் வாடி மையம் கட்ட மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இடம் சர்க்கார் புறம்போக்கு இடமாகும். தற்போது மாநகராட்சி பராமரிப்பில் உள்ள இடமாகும். மேற்படி இடத்தில் அங்கன்வாடி மையம் கட்ட வருவாய்துறையின் முன் அனுமதி பெற்று கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.548**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) மதி1/ம3/34102/2013**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.61, அவனியாபுரம் கிராமம் புல எண்:409/1 மனையிடத்தில் ஏற்கனவே இயங்கிவரும் வெற்றி A\C திரையரங்கு வளாகத்தினுள் மேலும் இரண்டு மினி A\C திரையரங்குகள் கட்டுவதற்கு மாநகராட்சி சார்பில் கருத்துரு மற்றும் தடையில்லாச் சான்று வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து ந.க.எண்:சி1/52190/13 நாள்: 05.09.2010 தேதிய கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள வரைபடத்தில் உத்தேசித்து இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் இரண்டு மினி ஏசி (Air Condition) திரையரங்குகளின் மொத்த பரப்பளவு 6615.40 ச.மீ குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நகர் ஊரமைப்பு ஆணையரகத்தின் சுற்றறிக்கையின்படி 2000 ச.அடிக்கு மேல் கட்டப்படும் அனைத்து வணிக உபயோக கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி பெறப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் திட்டக் குழுமத்தின் திட்ட அனுமதி பெற்ற பின்னரே மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்:**

1. மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்தின் திட்ட அனுமதி பெறப்பட வேண்டும்.
2. மதுரை மாநகராட்சியின் கட்டிட அனுமதி பெற்ற பின்னரே கட்டிட பணிகள் துவங்கப்பட வேண்டும்.
3. கட்டிட அமைப்பு மற்றும் வசதிகள் அனைத்தும் தமிழ்நாடு சினிமா ஒழுங்கு முறை விதி 1957–ன் படி அமைக்கப்பட வேண்டும்.

எனவே மேற்கண்ட நிபந்தனைகளின் பேரில்மாமன்ற ஒப்புதலை பெற்று மாவட்ட் ஆட்சித்தலைவருக்கு கருத்துரு சமர்ப்பிக்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.549**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13) ம.பொ.4/ம.எண்.(TURIP) சிப்பம் 1/13-14**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை பணிகள்

நிறைவேற்றப்பட்ட போது பழுதடைந்த சாலைகளையும் மற்றும் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள முக்கிய சாலைகளையும் சீரமைக்க வேண்டி **42.976** கி.மீ நீளத்திற்கு ரூ.15.03 கோடியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு "தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் **2013**ன்" கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்புதல் (ந.க.எண்.4203/2013/E 3, நாள்.**11.06.2013**) பெறப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு, கடந்த **31.10.2013** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது.

அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மூலம் ஒப்புநோக்கு செய்யப்பட்டு, அதன் பின் விலைப்புள்ளி திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்களால் விலைப்புள்ளியில் கொடுக்கப்பட்ட கூடுதல் விலை விகிதத்திற்கு விலை குறைப்பு கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்ததாரர்களால் விலை குறைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | தலைப்பு | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒ ப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | தார் சாலை & பேவர் பிளாக் சாலை | ம.பொ.4 / ம.எண்.TURIP சிப்பம் **1** / 2013 - 14 வார்டு எண்.**1,2,3,4,7,8,18,91** ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் வார்டு எண்.**16,17,37,52** ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 415.50 | மெசர்ஸ். விக்னேஷ் & கோ., | நடப்பாண்டு **(2013–14)** விலை விகிதத்திற்கு 1% சதவீதம் குறைவு |
| 2 | தார் சாலை & பேவர் பிளாக் சாலை | ம.பொ.4 / ம.எண்.TURIP சிப்பம் **2** / 2013 - 14 வார்டு எண்.**6,19,21,22,23,24, 29,30,44,47** ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் வார்டு எண்.**32,33,45** ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 416.00 | திரு.T.A.G. காமராஜ் | நடப்பாண்டு **(2013–14)** விலை விகிதத்திற்கு 1% சதவீதம் குறைவு |
| 3 | தார் சாலை & பேவர் பிளாக் சாலை | ம.பொ.4 / ம.எண்.TURIP சிப்பம் **3** / 2013 - 14 வார்டு எண்.**59,60,62,20,48,92,94** ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் வார்டு எண்.**54** ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 314.00 | மெசர்ஸ். ஸ்ரீ காமாட்சி இன்ஜீனியரிங் | நடப்பாண்டு **(2013–14)** விலை விகிதத்திற்கு 1% சதவீதம் குறைவு |
| 4 | தார் சாலை & பேவர் பிளாக் சாலை | ம.பொ.4 / ம.எண்.TURIP சிப்பம் **4** / 2013 - 14 வார்டு எண்.**31,34,41,42,77, 95,97**ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் வார்டு எண்.**81,93,100** ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 357.50 | திரு. அருள்ராஜ் | நடப்பாண்டு **(2013–14)** விலை விகிதத்திற்கு 1% சதவீதம் குறைவு |

குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்கள் **2013–14**ம் ஆண்டு விலை விகிதத்தினை விட 1% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளார்கள். தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்ட நிதியின் மூலம் அரசு ஒதுக்கீடு செய்துள்ள மானியத் தொகை ரூ.1503.00 இலட்சம். மேற்படி நான்கு சிப்பங்களில் பெறப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யும் போது ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ரூ.**1646.25** இலட்சமாகும். ஏனவே மேற்படி மானியத் தொகையினை விட கூடுதலாக ஏற்படும் செலவீனம் ரூ.143.25 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஏற்று அன்னார்களுக்கு வேலை உத்திரவு வழங்கவும் ஏற்கனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.550**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14)** **மவ3/036878/2013**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4, பெரியார் பேருந்து நிலையம், பாரதியார் வணிக வளாகத்தில் இயங்கி வரும் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் சுற்றுலா தனியார் பேருந்துகள் (ஆம்னிபஸ்கள்) பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளதால் மேற்படி ஆம்னி பேருந்துகளை ஒருங்கிணைந்த மாட்டுத்தாவணி ஆம்னி பஸ் ஸ்டான்டிற்கு மாற்றம் செய்து கொள்ள ஆம்னி பஸ்கள் உரிமையாளர் சங்கத்திலிருந்து சம்மதம் தெரிவித்து கடிதம் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் 10x16 = 160 ச.அ அளவில் 30 அலுவலகமும் 10x10 = 100 ச.அ. அளவில் 19 அலுவலகமும் கட்டப்பட்டுள்ளது. 19 சிறிய அலுவலகங்களில் ஒன்றினை மட்டும் மாநகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெரிய அலுவலகத்திற்கு முன்வைப்பு தொகையாக ரூ.5,00,000/-ம் (ஐந்து லட்சம்) மாத வாடகை ரூ.4,300/- எனவும் சிறிய அலுவலகத்திற்கு முன்வைப்பு தொகை ரூ.3,00,000/-ம் (மூன்று லட்சம்) மாத வாடகை ரூ.2,900/-என நிர்ணயம் செய்யவும், மேலும் 10x10=100 ச.அடி அளவில் கூடுதலாக 11 சிறிய அலுவலகங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அலுவலகங்களுக்கு முன்வைப்புத் தொகை செலுத்தும் ஆம்னி பேருந்து உரிமையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்திட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.551**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்..) வி.வி.ராஜன்செல்லப்பா
நாள் : **19.11.2013** மேயர்
மதுரை. மதுரை மாநகராட்சி

**நாள் : 21.11.2013**

**<u>தீர்மானம்–1</u>**

ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் நல பாதுகாவலராக விளங்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அமமா அவர்கள் **08.06.2011** அன்று சட்டமன்றத்தில் இலங்கை தமிழர்கள் நலன் காக்கும் வகையில் போர்குற்றங்கள், இன படுகொலையை நடத்தியவர்களை, போர் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த, ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்தி, இலங்கை அரசு மீது பொருளாதார தடையை விதிக்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, அதன்மீது நடவடிக்கை எடுக்க கோரியும், **27.03.2013** அன்று சட்டமன்றத்தில், இலங்கை நாடு நட்பு நாடு என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும், இலங்கையில் நிகழ்த்தப்பட்ட போர் குற்றங்கள் மற்றும் இன படுகொலை குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன்விசாரனை நடத்திடவும், இலங்கை நாட்டின் மீது பொருளாதார தடை விதித்திடவும், தனி ஈழம் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு குழுவில் தீர்மானத்தை கொண்டுவர இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, அதன்மீது நடவடிக்கை எடுக்க கோரியும், **24.10.2013** அன்று சட்டமன்றத்தில் இலங்கை நாட்டில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலும் புறக்கணிக்க வேண்டும் என்றும், பெயரளவில்கூட இந்திய நாட்டின் சார்பாக, பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்றும், இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாக வாழ, இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை, காமன்வெல்த் கூட்டமைப்பில் இருந்து இலங்கை நாட்டை தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை, இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, அதன்மீது நடவடிக்கை எடுக்க கோரியும், **12.11.2013** அன்று சட்டமன்றத்தில் தமிழக மக்களின் ஒருமித்த கருத்துக்கும், உணர்வுகளுக்கும், மதிப்பளித்து காமன்வெல்த் மாநாட்டில், இந்தியா எந்த வகையிலும் பங்கேற்கக்கூடாது என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றி, இதுகுறித்து பாரத பிரதமருக்கு நேரடியாக கடிதம் அனுப்பி, தொடர்ந்து இலங்கை தமிழர்கள பிரச்சினையில், மத்திய அரசிடம் கடுமையாக போராடி வரும் உலகத் தமிழினத்தின் ஒட்டுமொத்த காவல் தெய்வமாக விளங்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, இம்மாமன்றக் கூட்டம் கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.520</u>**

**மேயர்**

**<u>தீர்மானம் – 2</u>**

தமிழ் இனத்தின் ஒட்டுமொத்த துரோகியாக விளங்கும் கருணாநிதி, மூன்று மணிநேரம் உண்ணாவிரதம் என்ற பெயரில், அதன்மூலம் இலங்கையில் மாபெரும் இனப்படுகொலைக்கு காரணமாக இருந்து விட்டும், தன்னுடைய குடும்ப லாபத்திற்காக, இலங்கை நாட்டில் விமான வர்த்தக சேவை செய்தும், இலங்கைக்கு சென்ற தூதுகுழுவில், தன்னுடைய மகள் கனிமொழியை அனுப்பி, தமிழ் இனத்தைக் கொன்ற ராஜபக்சேயின் இரத்தக் கறை படிந்த கரங்களால் பரிசு பொருளை வாங்க வைத்தும், தொடர்ந்து இலங்கை அரசுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் காங்கிரஸ் தயவால், தன் மகள் கனிமொழிக்கு எம்.பி பதவியை பெற்றுதந்த கருணாநிதி, அதற்கு பிராயசித்தமாக மத்திய அரசு எடுக்கும் அணைத்து தமிழ் இன துரோக செயல்களுக்கு மறைமுக ஆதரவு அளித்தும், தொடர்ந்து தமிழ் சமுதாயத்திற்கு துரோகம் செய்யும் கருணாநிதி, அரசியல் பிழைப்பிற்காக தற்போது டெசோ என்ற பெயரில், இலங்கை தமிழர்கள் மீது நீலி கண்ணீர் வடிக்கும் இரட்டை நாக்குள்ள ஒட்டு மொத்த தமிழின துரோகி கருணாநிதியை, இம்மாமன்றக் கூடடம் வன்மையாக கண்டிக்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.521</u>**

**மேயர்**

**<u>தீர்மானம்–3</u>**

கல்வி நாட்டின் வருங்கால தூண்களான மாணவர் சமுதாயத்திற்கு, பல்வேறு நலத்திட்டங்களை வாரி வழங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகம் முழுவதும் உள்ள 1 முதல் 8–ம் வகுப்பு படிக்கும், 53 லட்சத்து 53 ஆயிரம் மாணவர்களுக்கு ரூபாய் 353 கோடியே 22 லட்சம் மதிப்பில் சீருடைகள், தமிழகம் முழுவதும் உள்ள 10 முதல் 12 வகுப்பு படிக்கும் 24 லட்சத்து 76 ஆயிரம் மாணவர்களுக்கு ரூபாய் 381 கோடி மதிப்பில் சிறப்பு ஊக்கத் தொகைகள், தமிழகம் முழுவதும் உள்ள 12–ஆம் வகுப்பு படிக்கும் 5 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கு ரூபாய் 925 கோடி மதிப்பீட்டில் மடிக்கனிணிகள், தமிழகம் முழுவதும் உள்ள 86 லட்சத்து 76 ஆயிரம் மாணவர்களுக்கு ரூபாய் 110 கோடியே 96 லட்சம் மதிப்பில் நோட்டு புத்தகங்கள், தமிழகம் முழுவதும் உள்ள 97 லட்சத்து 70 ஆயிரம் மாணவர்களுக்கு ரூபாய் 217 கோடியே 22 லட்சம் மதிப்பில் பாடநூல்கள், தமிழகம் முழுவதும் உள்ள 6 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்களுக்கு ரூபாய் 200 கோடியே 98 லட்சம் மதிப்பில் சைக்கிள்கள், இப்படி மாணவர் சமுதாயத்திற்கு கிள்ளி கொடுத்தால் போதாது என்று, வாரி வழங்கிவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, இம்மாமன்ற கூட்டம் கோடானுகோடி நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.522</u>**

**மேயர்**